# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com





தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள், 2017ம் ஆண்டின் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்குப் பிறகு தலைமை ஆலய கட்டிடத்தில் 2017ம் ஆண்டிற்கான பொதுக்குழு கூட்டத்தை நடத்தினார். 2018 புதுவருட ஆராதனையை முக்கியப்படுத்தி, மான்மின் தலைமை சபையிலுள்ளவர்களும், உலகமெங்கிலும் ஏறக்குறைய 11,000க்கும் மேற்பட்ட கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபை விசுவாசிகளும் 2018ம் ஆண்டில் ஜெபித்து நிறைவேற்ற வேண்டிய தேவன் அருளிய நான்கு தரிசனங்களை அறிவித்தார்.

## முதல் தரிசனம்: 'மறு-சிருஷ்டிப்பின் வல்லமையால் மண்டலங்களைப் பயன்படுத்தி' நிறைவேற்றும் பரிசுத்த ஊழியம்

யோவான் 14:12ல் வாசிக்கலாம், ''மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.'' வாசித்தபடி, மறுசிருஷ்டிப்பின் வல்லமையினால் மண்டலங்களை பயன்படுத்தும் ஆளுமையை அடைந்தப் பிறகு மிகவும் விரும்பத்தக்க கனிகள் விளையும், உகந்த பலன்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

'மண்டலங்களை பயன்படுத்துவது' என்பதன் அர்த்தம் 'மறு சிருஷ்டிப்பின் வல்லமையால் அனைத்து வானங்களையும் கட்டுப்படுத்துவதாகும்.' இந்த மறுசிருஷ்டிப்பின் வல்லமை வெளிப் படுத்தப்படும்போது, ஆவிக்குரிய உலகத்திலும் சரி இந்த நாம் வாழும் உலகத்திலும் சரி கூடாதது என்பதே இருக்காது. புயல்களை வலுவிழக்கச் செய்ய முடியும், சூறாவளி புயல்கள் வரும் திசையையும் மாற்ற முடியும். அந்த வல்லமையால் வறட்சியை நிறுத்த மழை மேகங்களை உருவாக்கவும், வெள்ளங்களை தடுக்க மழைமேகங்களை மறையச் செய்யவும் முடியும். மஞ்சள் மாசு அல்லது மிகுதியான மாசுகளினால், காற்று மாசுபாடு அடையாதபடி நல்ல காற்றை வீசச் செய்து தடுக்கமுடியும். இவை அநேக ஆத்துமாக்களை இரட்சித்து புதுப்பிக்கவும், ஆவிக்குரிய உலகத்தை தெளிவாய் அவர்களுக்கு காண்பிக்கவும் முடியும்.

## இரண்டாவது தரிசனம்: 'உண்மையுள்ள இருதயம் விசுவாசத்தின் பூரண நிச்சயம்' மூலமாக பதில்கள் நிரம்பி வழிகிற மகிழ்ச்சி நிறைந்த ஊழியம்

எபிரெயர் 10:22 சொல்கிறது, ''துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.'' நாம் ஒரு உண்மையுள்ள இருதயத்தையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் பெறும்போதுதானே சேனைகளின் தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களையும் அன்பையும் பெற்றுக் கொள்வோம்.

தேவன் ஆயத்தம் செய்த ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள, நீங்கள் அதற்கேற்ற பாத்திரத்தை ஆயத்தம் செய்யவேண்டும்; அதற்கு உண்மையுள்ள இருதயத்தையும், விசுவாசத்தின் பூரண நிச்சயத் தையும் நிறைவேற்ற வேண்டும். இதை நிறைவேற்றுவதற்கு, உங்கள் இருதயத்தை சுத்திகரித்து, சத்தியத்தினால் உங்கள் இருதயத்தை நிரப்ப வேண்டும். இந்த பாவமும் தீமையும் நிறைந்த உலகத்திலும்கூட, மேய்ப்பரின் அன்பையும், அவர் உங்களுக்காக நிறைவேற்றின நீதியின் விலைக்கிரயத்தையும் நீங்கள் விசுவாசித்து, மெய்யான வெளிச்சத்தையும், ஒளியையும் சார்ந்துகொள்ளும்போது, உங்களால் தீமையான கிரியைகளை களைந்துப்போட முடியும். அதோடுகூட, தீய மனச்சாட்சியையும், உங்களுடைய சுபாவத்தின் ஆழத்தில் மறைந்துள்ள தீமையானவற்றையும் அகற்ற முடியும்.

நீங்கள் கன்மலை விசுவாசத்தில் நின்று, ஆவிக்குரிய மற்றும் பூரண ஆவிக்குரிய நிலைகளுக்குள் செல்வதின்மூலம், ஆசீர் வாதமான காலங்களில் மிகப் பெரிதான மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் என உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

## மூன்றாவது தரிசனம்: 'மெய்யான ஆலயத்தை' கட்டி எழுப்புவதற்கு விசுவாசிகள் எழும்பி பிரகாசிக்கும் ஊழியம்

ஏசாயா 60:1 சொல்கிறது, ''எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.'' நாம் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பிறகு பரிசாக பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும்போது ஒளியை பிரகாசிப்பிக்க முடியும். பரிசுத்த ஆவி நமக்குள் உள்ள ஆவியை உயிர்ப்பிப்பதன்மூலம் நாம் ஆவிக்குரிய மற்றும் பூரண ஆவிக்குரிய நபர்களாக மாறவும் முடியும்.

எழும்பி பிரகாசிக்கிற விசுவாசிகளால் கட்டப்படுகிற ஆலயமே மெய்யான ஆலயமாகும். அந்த மெய்யான ஆலயத்தில்தானே, தேவனுடைய இருதயமும், சித்தமும் அறிவிக்கப்படும்; மேலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் வியாதிகள், பெலவீனங்கள், அசுத்த ஆவியின் பீடிகள் மற்றும் தங்கள் வீடுகள், வேலை செய்யும் இடங்கள் மற்றும் தொழிலிலிருந்து மக்கள் விடுதலையைப் பெற்றுக் கொள்வார்கள். தேவனுடைய தீர்மா –னத்தின்படி பிரம்மாண்டமான பேராலயம் கட்டப்படும்; அது கடைசி காலங்களில் மெய்யான ஆலயமாக விளங்கும். அதனால் கணக்கற்ற ஆத்துமாக்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள அந்த பேராலயத்திற்குள் வெள்ளமாய் திரண்டு வருவார்கள்.

## நான்காவது தரிசனம்: 'ஆவிக்குரிய அன்பை' பூரணமான விதத்தில் நிறைவேற்றும் ஊழியம்

1 கொரிந்தியர் 13:13 சொல்கிறது, ''இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.'' ஆவியின் பெரிய வெகுமதிதான் ஆவிக்குரிய அன்பு. ஏனென்றால் ஆவிக்குரிய அன்பு, நாம் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக நமக்கு உதவிச் செய்கிறது; புதிய எருசலேம் பட்டணத்திற்குள் நுழையும் மகிமையை பெறச் செய்கிறது.

2007ல், தேவன் என்னிடத்தில் ஒரு ஆசையை மனதில் நிர்ணயித்து அதை மேடையிலிருந்து அறிவி என்று சொன்னார். மேலும் அந்த ஆசையை நிறைவேற்றி, அதன்மூலமாக நாங்கள் அவருக்கு மகிமையை செலுத்தும்படியாகச் செய்வேன் என்றார். நான் இருதயத்தில் மிகவும் அதிகமாய் உந்தப்பட்டு நினைத்த ஆசை வேறு எதுவுமில்லை, ''ஆவிக்குரிய அன்பு'' ஒன்றுதான். தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபடி, தேவனுடைய அன்பின் ஆழம் இந்தத் திருச்சபையில் வெளிப்பட்டது; குறிப்பாக, 2010ம் ஆண்டிலிருந்து தேவனுடைய அன்பு விசுவாசிகளின் இருதயங்களில் ஆழமாய் பதிக்கப்பட்டது. தேவன், இந்தத் திருச்சபையில் 2018ம் ஆண்டில் ஆவிக்குரிய அன்பு அதிக பூரணமாய் இறங்கிவரும் என்று சொல்லியிருக்கிறார்.

2018 புது வருடத்தில், மறுசிருஷ்டிப்பின் வல்லமையால் மண்டலங்களைப் பயன்படுத்துவதன் மூலமாக மெய்யான ஆச்சரிய கிரியைகள் இடைவிடாது தெள்ளத் தெளிவாய் நிகழும். நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையுள்ள இருதயத்தையும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் அடையப்பெற்று, பூரணமாய் ஆவிக்குரிய அன்பை நிறைவேற்ற வேண்டும். அதன்மூலமாக ஒளியை பிரகாசித்து, கடைசி காலங்களில் வல்லமையாய் தேவ திட்டங்களை நிறைவேற்றும் மேய்ப்பரின் ஊழியத்தில் ஒரு பகுதியாக இருக்க முடியும்.

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' (யோவான் 14:12).



**தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ**

தேவன் தம்முடைய வார்த்தையால் எல்லாவற்றையும் சிருஷ்டித்ததால், சிருஷ்டிப்பின் வல்லமையை காண்பித்தார். இது ஆதியாகமத்தின் முதலாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர், ''வெளிச்சம் உண்டாகக்கடவது'' என்று சொன்னவுடனே வெளிச்சம் உண்டாயிற்று. அவர் சிருஷ்டிப்பின் முதலாம் நாளிலே பூமியை ஒளியால் சூழ்ந்து பின்னர் நாளுக்கு நாள் தமது சிருஷ்டிப்பைத் தொடர்ந்தார்.

''மறுசிருஷ்டிப்பின் கிரியைகள்'' என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உண்டாக்குகிற தேவனுடைய சிருஷ்டிப்பு அல்ல; ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்டதை மாற்றுதல் அல்லது புதுப்பித்தல் என்பதாகும்.

### 1. இயற்கை சூழ்நிலையின் மறுசிருஷ்டிப்பு

தேவன் மெய்யான ஒளியால் அதை சூழ்ந்த போது சிருஷ்டிப்பின் முதலாம் நாளிலே இயற்கை நியமம் ஸ்தாபிக்கப்பட்டது. உதாரணமாக, பூமியானது நாள் ஒன்றுக்கு ஒரு முறை தன்னை சுழற்றுகிறது. சூரியனைச் சுற்றி வருடத்திற்கு ஒரு முறை சுழன்று வருகிறது. தண்ணீர் மேல் இருந்து கீழே பொழிகிறது. தண்ணீர் கடல் மட்டத்தில் 0 டிகிரியில் உறைகிறது. 100 டிகிரி செல்சியஸில் கொதிக்கிறது. காலங்களின் ஒழுங்கு, வசந்த காலம், கோடைக்காலம், இலையுதிர்காலம், மற்றும் குளிர்காலமாக இருக்கிறது. இயற்கை மண்டலத்திற்கு தேவையான இந்த அனைத்து நியமங்களும் சிருஷ்டிப்பின் முதல் நாளிலே ஸ்தாபிக்கப்பட்டன.

தேவன் சிருஷ்டிப்பின் மெய்யான வெளிச்சத்திற்குள்ளாக சகல சிருஷ்டிகளின் நடுவிலும் நியமங்களையும் ஒழுங்கையும் முதலாவது ஏற்படுத்தினார். ஆனால் மனுக்குலம் பலுகிப் பெருகி பாவங்கள் தாண்டவமாடியபோது, இந்த சிருஷ்டிப்பின் ஒழுங்கு அதிகமதிகமாக குதர்க்கமாகியது. தாக்குப்பிடிக்க முடியாத வளர்ச்சியினால், இந்த இயற்கை உலகம் அழிக்கப்பட்டு, பூமி அதிகமதிகமாக மாசுபடிந்து கொண்டிருக்கிறது. அதன் விளைவாக நாம் அளவுக்கதிகமான வழக்கத்திற்கு மாறான தட்பவெட்பத்தையும், பல இயற்கை சீற்றங்களையும் அனுபவிக்கிறோம். ஆனால் எனக்களிக்கப்பட்ட மறுசிருஷ்டிப்பின் வல்லமையால், இயற்கை சீற்றங்கள் தடுக்கப்பட முடியும். அது ஏற்கனவே நடந்துவிட்டதானதால், அதன் பாதிப்பு சிறிதளவில் காக்கப்படும்படியாக அதன் பின் துயற்சியின் அளவு குறைக்கப்படக்கூடும்.

இப்பேர்பட்ட காரியங்கள் தட்பவெட்பத்தை கட்டுப்படுத்தக்கூடிய வல்லமையின் மூலம் சாத்தியமாகும். இயற்கை சீற்றங்களின் காரணம் பூலோக வெப்பமையமாகுதல், நீங்கள் இந்த பிரச்சனையை தீர்த்தால் இயற்கைச் சீற்றங்கள் தடுக்கப்பட முடியும். ஆனால், அது நீங்கள் விரும்புகிற வண்ணமாக பூமியின் தோராய வெப்பநிலையை கொண்டு வந்துவிட முடியும் என்பதாகாது. இதன் அர்த்தம் நீங்கள் இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்ட அல்லது ஏற்பட விருக்கிற குறிப்பிட்ட பகுதிகளில் தட்ப வெட்பத்தை கட்டுப்படுத்தலாம் என்பதாகும்.

செப்டம்பர் 2017 துவக்கத்தில், மிக பயங்கர வலுவான சூறாவளி என்ற இர்மா புயல் அமெரிக்க ஐக்கிய குடிமக்களுக்கு நடுக்கத்தை கொண்டு வந்தது. சாத்தியமான பேரழிவு பாதிப்புகளை தவிர்ப்பதற்கு, உள்நாட்டு போதகர்கள் திருச்சபைக்கு ஜெப விண்ணப்பங்களை அனுப்பினார்கள். அதற்காக நான் ஜெபித்தேன். விளைவாக, சூறாவளியின் பாதை மாறி, பெலவீனமடைந்து, சீக்கிரத்தில் மறைந்தது. அந்த தேசம் ஏற்படவிருந்த பேரழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது. அக்டோபர் 2016 துவக்கத்தில், மேத்யூ சூறாவளிக்காக ஜெபித்தபோது ஒரே நாளிலே தன் பாதையை அது மாற்றிச் சென்றது. ஜெபத்தின் வல்லமையால் புயல்கள் மற்றறும் சூறாவளிகள் தங்கள் வழி பாதைகளை மாற்றி மறைந்துப்போன கிரியைகள் அடிக்கடி நடந்துள்ளன.

துல்லியமான அறிவியல் தொழில்நுட்பம் இருந்தாலும் கூட இயற்கை சீற்றங்களை அனுமானிப்பது என்பது கடினமாகவுள்ளது. அப்படியே அவைகள் அனுமானிக்கப்பட்டாலும் அவைகளை நிறுத்துவது கடினமாகவுள்ளது. இந்தச் சீற்றங்கள் மிக அதிகமாக ஏற்படும். ஆனால் மறுசிருஷ்டிப்பின் வல்லமையோடு, நாம் அவைகளை நிறுத்தலாம் அல்லது பாதிப்புகளையாவது குறைத்துக் கொள்ளலாம்.

### 2) மனுஷ சரீரத்தை மறு சிருஷ்டிக்கும் வல்லமை

கிருமிகள் மற்றும் வைரஸ்களால் ஏற்பட்ட வியாதிகள் மறுசிருஷ்டிப்பின் வல்லமை இல்லாமல், பரிசுத்த ஆவியின் அக்கினியால் சுகப்படுத்திவிட முடியும். ஆனால் நரம்புகள் செத்துவிட்டன அல்லது திசுக்கள் உருவழிந்துவிட்டன என்ற

#### ''நாங்கள் இர்மா சூறாவளியிலிருந்து பாதுகாக்கப்பட்டோம்''



சகோதரி வெலன்டினா கொலோவினா
வயது 69, நியூயார்க் சர்வதேச மான்மின் சபை, USA

செப்டம்பர் 2017ல், நிகழ்ந்திராத, வலுவான இர்மா சூறாவளி ப்ளோரிடாவை நோக்கி வந்து கொண்டிருந்தது. என்னுடைய பட்டணத்திற்கு ஊரை காலி செய்யும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், எனது கணவர் நோய்வாய்பட்டிருந்தபடியால் எங்களால் வீட்டை விட்டுச் செல்ல முடியவில்லை. முடிவில் நான் தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ அவர்களிடத்தில் ஜெப விண்ணப்பம் அனுப்பினேன். நான் எனது கணவரிடம் தேவனுடைய பாதுகாப்பின்கீழ் நாங்கள் இருக்கிறோம் என்று விசுவாசத்தோடு உறுதியாக உணருமாறு சொன்னேன். பிற்பாடு, இர்மா புயல் நகரம் முழுவதையும் கடந்துச் சென்றது. ஆனால் என் வீட்டைச் சுற்றியிருந்த ஒரு மரம்கூட சேதமாகவில்லை. எல்லாம் பாதுகாக்கப்பட்டது.

#### ''பறவை காய்ச்சலிலிருந்து சதுப்பு நிலங்கள் பாதுகாப்பாகவே இருந்தன''



கண்காணி ஜோங்ஒன் லீ
வயது 40,
தேகு மான்மின் சபை

நான் தேசிய சதுப்பு நிலங்கள் மையத்தின் தலைவர். நவம்பர் 2016ல், எனது மையத்திற்கு அருகில் உள்ள சாங்நியோங் ஊபோ சதுப்பு நிலங்களில் அன்னப்பறவைகள் செத்துக் கிடந்தன. அவைகள் பறவை காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவை என்று உறுதி செய்யப்பட்டன. மையத் தலைவராக சதுப்பு நிலங்களை பாதுகாப்பது என்பது என்னுடைய உத்தரவாதம். நான் தலைமை போதகருடைய மறுசிருஷ்டிப்பின் வல்லமையில்லாமல் பறவை காய்ச்சலை துரத்துவதற்கு வேறு வழியே இல்லை என்று நினைத்தேன். மேலும் சேதமாகாமல் இருக்க விருப்பத்துடன், நான் தலைமை போதகரிடத்தில் ஜெபத்தைக் கேட்டேன். ஜெபத்திற்குப் பின்னர், அப்பகுதியில் சந்தேகத்திற்குரிய பறவை காய்ச்சல் பாதிப்புகள் பற்றிய அறிக்கை ஏதுமில்லை.

#### ''மலட்டுத்தன்மையோ டவுன் சின்ட்ரோமோ ஒரு பிரச்சனையே இல்லை!''



போதகர் சூஹீயிம்
வயது 49, மாகாணம் 12,
மான்மின் மத்திய திருச்சபை

திருமணமான 13 ஆண்டுகளாக எனக்கு குழந்தையில்லை. காரணத்தை கண்டறிய முற்பட்டும் எந்த ஒரு குறிப்பிட்ட காரணத்தையும் நான் கண்டறியவில்லை. இறுதியாக அதை விட்டுவிட்டு தத்து பிள்ளையை குறித்து யோசிக்க ஆரம்பித்தேன். 2007ல், நான் மான்மின் திருச்சபைக்கு வழிநடத்தப்பட்டேன். தலைமை போதகருடைய ஜெபத்தினால், நான் கருத்தரிக்கும் ஆசீர்வாதம் பெற்றேன். கருத்தரித்த நான்காவது மாதத்தில் நான் ஸ்குவாடு திரையிடல் பரிசோதனை மேற்கொண்டேன். அதன் விளைவு 1:267, அது டவுன் சின்ட்ரோம் சாத்தியக்கூறை வெளிப்படுத்தியது. அடுத்த நாள் நான் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றேன். மறுபடியும் ஸ்குவாடு பரிசோதனை செய்தேன். அதன் முடிவு 1:1810. அது டவுன் சின்ட்ரோம் எதிர்மறையாயிற்று. ஏப்ரல் 2009ல், நான் இறுதியாக ஆரோக்கியமான மகனைப் பெற்றேன்.

#### ''எனது குருட்டு இடது கண், பார்வையை திரும்பப் பெற்றது!''



கண்காணி கேகேசுரன்
வயது 63,
மங்கோலியா மான்மின் சபை

நான் 17 வயதாயிருந்தபோது, ஒருவர் என் தலையில் இரும்பு கம்பியால் அடித்தார். அதன்பின்னர், கொஞ்சம் கொஞ்சமாக எனது இடது கண்ணில் இறுதியாக குருடாகும்வரை பார்வை இழந்து கொண்டிருந்தேன். அதன் பின்னர், அது குணமாக்கப்பட முடியாதென்று உறுதிசெய்யப்பட்டது. மன அழுத்தத்தில் கஷ்டப்பட்டேன்; குடிகாரனானேன்; சூதாடினேன். ஆனால் நான் ஆண்டவரை ஏற்றுகுகொண்டு மாற்றத்தை அனுபவித்தேன். அக்டோபர் 2015ல், எனது சபையின் பணித்தள ஊழியர் போட்சோ ரிக் எனக்காக அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்ததான கைக்குட்டையுடன் எனக்காக ஜெபித்தார் (அப். 19:11–12). பின்பு, மீண்டுமாக நான் என் இடது கண் மூலமாக பார்க்க துவங்கினேன். பார்வை 0.03 ஆகவும், வலது கண்பார்வை 0.5 லிருந்து 0.7 ஆகவும் மாறியது.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை ''அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்'' மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

''எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...'' [அப். 17:25]
''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' [அப். 4:12]

# மறுசிருஷ்டிப்பின் வல்லமை

நிலையில், அவைகள் புதிய செல்கள் மற்றும் திசுக்களாக சிருஷ்டிக்கப்பட்டால் மட்டுமே சீர் நிலையைப்பெற முடியும். உதாரணமாக, செத்த கண்நரம்புகள் குருட்டுத்தன்மையை ஏற்படுத்தினால், அந்த செத்த நரம்புகளை உயிர்ப்பித்தால் அவர்களால் கண் பார்வையை திரும்ப பெற முடியும்.

மறுசிருஷ்டிப்பின் வல்லமையால் தான் இந்த செத்த அல்லது உருவழிந்த செல்களும் திசுக்களும் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட முடியும். அந்த வல்லமை, உயிர்களின் மிக அடிப்படை வஸ்துவாக உள்ள செல் நியூக்ளியஸிலுள்ள குரோமோசோம்களை கூட மறுபடியும் சிருஷ்டிக்கும். அதற்கு ஒரு நல்ல உதாரணம் கருவிலுள்ள குழந்தையில் காணப்படுகிற டவுன்சின்ட்ரோம் சுகமாகுதல்.

நமக்கு 23 ஜோடுகளாக மொத்தம் 46 குரோமோசோம்கள் உள்ளன. ஆனால் சில மக்களுக்கு இந்த 23 ஜோடுகளின் 21வது ஜோடில் கூடுதலாக ஒரு குரோமோசோம் காணப்படும். இதுதான் டவுன் சின்ட்ரோமை ஏற்படுத்திவிடுகிறது. டவுன் சின்ட்ரோம் மூளை வளர்ச்சி கோளாரு, இயற்கை உடல் அசாதாரணங்கள், சரீர செயல் இயலாமைகள், மற்றும் வளர்ச்சி சிதைவுகளை ஏற்படுத்திவிடுகிறது. கண்காணியாள் ஹிக்யோங் சோங் தனது கர்ப்பந்தரித்த 16வது வாரத்தில் செய்யப்பட்ட பரிசோதனையில் குழந்தைக்கு டவுன் சின்ட்ரோம் உள்ளது என அறிக்கை பெற்றுக்கொண்டாள். அந்தத் தம்பதியினர் அந்த சிசுவிற்கு, அசைவு கோளாரு, பேச்சுக் கோளாரு, மற்றும் கண்கள், மூக்கு மற்றும் வாய் ஆகியன சமசீரற்ற நிலையில் உள்ளன என கேள்விப்பட்டார்கள். மருத்துவர்கள் தாயின் உயிர் கருதி கருக்கலைப்பு செய்யும்படி பரிந்துரைந்தார்கள்.

ஆனால் இத்தம்பதியினர் எனது ஜெபத்தை பெற்றுக்கொண்டனர். அந்த குழந்தை எந்த ஒரு பிரச்சனையுமே இல்லாமல் பிறந்து நன்கு வளர்ந்துள்ளான்.

மறுசிருஷ்டிப்பின் வல்லமையால் குரோமோசோம்களை மறுபடியும் சிருஷ்டிக்கும் வேறொரு நிரூபணம் சிசுவின் பாலினத்தை மாற்றுவதில் காணப்படுகிறது. ஒரு குழந்தையின் மரபணு பாலினம் கருத்தரிக்கும் நேரத்தில் தீர்மானிக்கப்படுகிறது. 13 முதல் 14வது வாரத்தில், அல்ட்ரா–சௌண்ட் மூலம் சிசுவின் பிறப்புறுப்புகளை பார்க்க முடியும். சிசுவின் பாலினத்தோடு சம்பந்தப்பட்டுள்ள குரோமோசோம் எண் 23 ஆகும். பெண் என்றால் XX மற்றும் ஆண் என்றால் XY ஆக சிசுவின் பாலினம் மாறுவதற்கு அனைத்து 23ம் எண் குரோமோசோம்களும் மாற்றப்பட வேண்டும்.

மூத்த கண்காணியை சுன்ஹோ கிம் கர்ப்பந்தரித்த ஒன்பதாவது மாதத்தில் சிசு ஆண் என்று உறுதி செய்தார்கள். ஆனால் என் ஜெபத்திற்குப் பின் பெண் குழந்தையை பெற்றெடுத்தார்கள். ஜப்பான், யமகத்தாவில் உள்ள மூத்த கண்காணியை யுன்யோங் சோய் அவர்களுக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். 3வது பிள்ளையை அவர்கள் கருத்தரித்தார்கள். 5வது மாதத்தில், அவள் அது பையன் என்று கண்டறிந்தாள். ஆனால் அவள் ஒரு பெண் குழந்தையை விரும்பினாள். அதனால் அவள் என் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாள், அவள் ஒரு மகளைப் பெற்றெடுத்தாள்.

மறுசிருஷ்டிப்பின் வல்லமையால் தேவனால் ஒரு கனப்பொழுதில் கிரியை செய்ய முடியும். ஆக பாலினம் கர்ப்பந்தரித்து எத்தனை நாளானாலும் பொருட்டில்லாமல் மாற்றப்பட முடியும்.

### 3. மனித இருதயத்தின் மறுசிருஷ்டிப்பு

தேவனால் கறைபடிந்த பொல்லாப்பால் நிறைந்த இருதயங்களை ஆவியின் இருதயமாகவும், நற்குணத்தின் இருதயமாகவும் மாற்ற முடியும் (சங்கீதம் 51:10).

எசேக்கியேல் 36:26–27, மறுசிருஷ்டிப்பின் வல்லமை எப்படி மனிதர்களுடைய இருதயத்தை மாற்ற முடியும் என்பதை குறித்துப் பேசுகிறது. அது இஸ்ரவேல் திரும்ப கட்டப்படுவதைக் குறித்தும், முடிவுகாலத்தில் வெளிப்படவுள்ள மறுசிருஷ்டிப்பின் வல்லமையை குறித்தும் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனமாகும். அது, "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்" என்று சொல்கிறது. கல்லான இருதயம் என்பது பொல்லாத இருதயத்தைக் குறிக்கிறது. அது அகற்றப்பட்டு, சதையான இருதயம் அதாவது நற்குணமுள்ள இருதயம் மறுசிருஷ்டிப்பின் வல்லமையால் கொடுக்கும்.

ஆனால் மனிதர்களுடைய இருதயத்தை மாற்றுகிற வல்லமை குறிப்பான நோக்கம் ஏதுமில்லாமல் அருளப்பட மாட்டாது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு பாவிகளை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்க தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தி, அன்பினால் நியாயப்பிரமாணங்களை நிறைவேற்றினார். அதன் விளைவாக, புதிய நீதி சட்டம் ஸ்தாபிக்கப்பட்டது; இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யாராயிருந்தாலும் அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து பாவமன்னிப்பைப் பெற்று, தேவனுடைய பிள்ளைகளாகும் உரிமைப் பெறுகிறார்கள்.

மறு சிருஷ்டிப்பின் வல்லமைக்கும் இது ஏற்புடையதாயிருக்கிறது. இரட்சிக்கப்பட கூடாதபடி அதிகமாக பொல்லாப்பினால் கறைபடிந்த இருதயமாயிருந்தாலும்கூட அந்த இருதயத்தையும் இது மாற்றும். ஆனால் இந்த வல்லமையை பெற, அதற்கேற்ற தியாகம் இருக்க வேண்டும். அதிகமாக கறைபடிந்த ஆத்துமாக்களுக்காக, தேவன் அவர்கள் சார்பாக, அவர்கள் இரட்சிப்பின் வாய்ப்பை பற்றிக்கொள்ளும்படியாக, நான் 99% நீதியின் அளவை நிறைவேற்றும்படி செய்தார். அதன்விளைவாக, எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என விரும்புகிற தேவனுடைய நல்ல சித்தம் அதிக முழுமையாக நிறைவேறியுள்ளது.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, மறுசிருஷ்டிப்பின் வல்லமை என்பது யாரானாலும் தேவனை சந்தித்து, இரட்சிப்பைப் பெற்று, புதிய எருசலேமிற்கு போக வைக்கக்கூடிய தேவனுடைய அன்பின் வெகுமதியாகும். மேலும் மறுசிருஷ்டிப்பின் வல்லமை இந்தக் கடைசிகாலத்தில் அந்திக் கிறிஸ்துவின் வல்லமையிலிருந்து எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிக்கிற ஆயுதமாகவும் இருக்கிறது. இந்த அறிவினாலும் வல்லமையினாலும் நீங்கள்தானே இந்த மறுசிருஷ்டிப்பின் வல்லமையை அனுபவிக்குமாறு ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

### "நான் பிறவி செவிடன், ஆனால் இப்போது என்னால் கேட்கவும் பேசவும் முடிகிறது!"



சகோதரர் லியுகர் லக்,
வயது 25, செலாங்கார் மான்மின்
செவிடர் சபை, மலேசியா

நான் பிறவி செவிடன். மார்ச் 2014ல், நான் புதன் மாலை ஆராதனையில், சைகை மொழி பெயர்ப்பின் மூலமாக பிரசங்கத்தை கவனித்தேன் (நெவ்சிஸ் காணொளி முறைமை). திடீரென்று, நான் ஒலியை கேட்க ஆரம்பித்தேன். அதுதான் நான் கேட்பதின் முதல் முறை. முதலாவதாக நான் பயமடைந்தேன். ஒவ்வொரு தனி ஒலியும் எனக்கு விநோதமாக இருந்தன. கார், இயந்திர இருசக்கரம் மற்றும் சாப்பிடும்போது போன்ற ஒலிகளும்கூட.

மார்ச் 2015ல், நான் சிறப்பு தானியேல் ஜெபக்கூடுகையின் முதல் நாளிலே தலைமைப் போதகருடைய ஆசீர்வாத ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். ஜெபத்திற்கு பின்னர், முன்பைவிட சிறப்பாக கேட்க ஆரம்பித்தேன், ஒவ்வொரு ஆகஸ்டு மாதமும் நான் மான்மின் கோடை ஏகாந்தத்தில் பங்குப்பெற பங்குப்பெற, நான் இன்னும் சிறப்பாக சிறப்பாக கேட்க ஆரம்பித்தேன். கூடுதலாக, நான் கொஞ்சம் கொஞ்சமாக பேச முடிகிறது.

### "நான் பார்கின்சன் வியாதியிலிருந்து குணமானேன்"



கண்காணி மான்பே பார்க்,
வயது 67, மாகாணம் 19,
மான்மின் மத்திய திருச்சபை

2010ல், பார்கின்சன் வியாதி என்னைத் தாக்கியது. எனது முக தசைகள் இறுகிவிட்டன. எனது இடது காலை இழுத்து நடந்தேன், டை கட்டுவது கடினமாயிருந்தது. நான் படபடத்து சாகவும்கூட விரும்பினேன். மே 2016லிருந்து நான் ஒவ்வொரு ஆராதனை வேளைகளிலும் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். மான்மின் ஜெபமையத்தில் தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் திருமதி. போக்நிம் லீ அவர்களது கைக்குட்டை ஜெபத்தையும் பெற்றேன். எனது இறுகிய முகம் தளர்ந்தது, எனது கைகளை தங்கு தடையின்றி அசைக்கலானேன். நான் ஆகஸ்டு 2017 மான்மின் கோடை ஏகாந்தத்தில் பங்குப்பெற்ற பின்னர், என்னால் இப்பொழுது ஓடவும் முடிகிறது.

### "பொல்லாத பேய்கள் என்னைவிட்டு ஓடின!"



கண்காணி ஹேசுக் சேய்
வயது 57, சீன மாகாணம்,
மான்மின் மத்திய திருச்சபை

எனது குடும்பம் அளவுக்கதிகமாக விக்கிரகங்களை வழிபட்டது. அதனால் நான் என் வாழ்வின் துவக்ககாலங்களிலிருந்தே இருளின் அதிகாரங்களால் கஷ்டப்பட்டேன். நான் எனது கஷ்டங்களிலிருந்து விடுபடுவேன் என்ற சொற்ப நம்பிக்கையோடு குறிகாரர்களாயிருந்த மதகுரு குடும்ப அங்கத்தினர்களில் ஒருவரை திருமணம் செய்து கொண்டேன். இருப்பினும், அந்த வேதனை அதிகரித்தது. காரணம் அறியாமலே நோய்வாய்பட்டேன். நான் கீழேபடுக்கும்பொழுது முட்களால் குத்துவதுபோல உணர்ந்தேன். பயத்தோடும் வேதனையோடும் பலமுறை தற்கொலை முயற்சி செய்திருக்கிறேன். அதேநேரம், என் தாய் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு என்னை மான்மின் சபைக்கு வழிநடத்தினார். நான் தலைமை போதகரை அறிந்த பின்னர் ஆகஸ்டு 2017ல் மான்மின் கோடை ஏகாந்தத்தில் பங்குப்பெற்றேன். அவரது ஜெபத்தால் பல ஆண்டுகளாக என்னைக் கஷ்டப்படுத்திய பொல்லாத பேய்கள் என்னைவிட்டு ஓடின.

### "நான் இப்போது மது அருந்துவதில்லை! போதைகள் எடுத்துக்கொள்வதில்லை, மூர்க்கமாவதுமில்லை!"




கண்காணி சிட்டிபாபு,
வயது 50,
சென்னை மான்மின் சபை, இந்தியா

கடந்த காலங்களில், நான் மது மற்றும் போதை அடிமைத்தனங்களினால் மிகப்பெரிய கடனுக்குள்ளாக இருந்தேன். நான் கத்தியை எடுத்து எனது மனைவி மகன்களை மிரட்டி அவர்களை அடிப்பேன். ஆகவே, எனது குடும்ப அங்கத்தினர்கள் மன நிலையில் கஷ்டப்பட்டார்கள். ஆனால் நவம்பர் 2007ல், நான் சென்னை மான்மின் திருச்சபைக்கு வழிநடத்தப்பட்டேன், ஜீவ வார்த்தைகளை கேட்க ஆரம்பித்தேன். மது மற்றும் போதகைள் எடுத்துக்கொள்வதை நிறுத்தினேன். இப்போது நான் ஆட்டோ ஓட்டுனராகவும், ரியல் எஸ்டேட் ஏஜெண்டாகவும் பணிபுரிந்து ஆசீர்வாதங்களைப் பெற்று, கடனையெல்லாம் திருப்பி செலுத்தினேன். எனது குடும்பம் மற்றும் உறவினர்கள் திருச்சபையில் பங்குப்பெறுகிறார்கள். அவர்கள் இருதய நோய் மற்றும் பக்கவாதம் போன்ற நோய்களிலிருந்து சுகம் பெற்றார்கள். நாங்கள் இப்போது விசுவாச குடும்பமாக இருக்கிறோம்.

# “மறுசிருஷ்டிப்பின் வல்லமையால் ஓவிய திறமை என்னுள் வளர்ந்தது”



**கண்காணியாள் எலினா லிட்வினா, வயது 57,**
**WCDN ரஷ்ய கருத்தரங்கு ஆயத்த குழுவின் மேலாளர்**

நான் அநேக வருடங்களாக ரஷ்யாவிலுள்ள புஸ்கின் மருத்து–வமனையில் தலைமை செவிலியராக பணியாற்றி வருகிறேன். திருச்சபையில், நான் தன்னார்வமாக பாடகர் குழுவின் நடத்துனராக பணிபுரிகிறேன்.

2016ம் ஆண்டின் துவக்கத்திலிருந்து, நான் கொடிதான மூட்டுவீக்கத்தினால் அவதிப்பட்டு வந்தேன். தீவிர வலியினிமித்தம் என்னால் சரிவர நடக்கவும் முடியவில்லை. நான் மருந்து, மசாஜ், ஊசி மற்றும் சரீர சிகிச்சை போன்ற எல்லாவற்றையும் செய்துப் பார்த்தும், பயனில்லை. நிலைமை மோசமாக, நான் மெதுவாகவே நடந்தேன். என் முட்டியை மடக்கவும் முடியவில்லை. குறிப்பாக, படிக்கட்டுகள் ஏறும்போது மிகவும் வேதனையாக இருந்தது. நான் ஜன்னலுக்கு வெளியே இயல்பாக நடந்துச் செல்லும் மக்களைப் பார்க்கும்போதெல்லாம், ‘அவ்வளவு சுதந்திரமாக நடந்துச் செல்வதின் மதிப்பை அவர்கள் அறிந்திருக்கிறார்களா?’ என்று யோசிப்பேன்.

அக்டோபர் 2016ல், மான்மின் தலைமை சபையின் 34வது ஆண்டுவிழாவிற்கு, WCDN ரஷ்ய கருத்தரங்கின் ஆயத்தக்குழு அங்கத்தினராய் இருந்ததால் நானும் அழைக்கப்பட்டேன். போதகர் விளாடிமிர் ஓஸிபோவ் அவர்களிடமிருந்து திருச்சபையை குறித்து அநேக காரியங்களை கேட்டிருந்ததால் அங்குச் செல்ல வாஞ்சை இருந்தது. என்னுடைய நீடித்த ஆசை நிறைவேறவிருந்–தாலும், என் உடல் ஆரோக்கியம் அதற்கு ஏற்றாற்போல நன்றாக இல்லை. எப்படியிருந்தாலும், நான் முயற்சியை விடவில்லை. நான் வலியை பொறுத்துக்கொண்டு விமானத்தில் ஏறி, முடிவாக கொரியாவிற்குச் சென்று இறங்கினேன்.

தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களை நான் உண்மையாகவே காண விரும்பினேன். அக்டோபர் 7 அன்று, நான் அவரைச் சந்தித்தேன்; என் மூட்டுவீக்கம், தீராத தலை வலிக்காக அவருடைய ஜெபத்தையும் பெற்றுக்கொண்டேன். நிஜத்தில், நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன்; அவர் ஒரு மிகப் பெரிய ஒரு திருச்சபையின் தலைமை போதகராய் இருந்தும்கூட, அவருடைய விலையேறப்பெற்ற நேரத்தை எங்களுக்காக செலவழித்தார்; எங்கள் ஒவ்வொருடனும் அருமையாக நடந்துக் கொண்டார். எங்களுக்கு பணிவிடைச் செய்து, எங்களிடம் மிகவும் அன்பாக இருந்தார். அவருடைய பெரிதான அன்பை உணர்ந்தேன், அவருக்கு மிகவும் நன்றியோடு இருக்கிறேன். மிகவும் குறிப்பாக, அவருடைய தாழ்மை என்னை மலைத்துப்போகச் செய்தது.

அவருடைய ஜெபத்தை நான் பெற்ற பிறகு, என் கால்களில் நான் மாற்றத்தை உணர்ந்தேன். நான் படிக்கட்டுகளில் ஏறின பொழுது, எனக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை. அடுத்த நாளில், சீயோலில் ஒரு மணி நேரம் சுற்றுப் பயணம் செய்தேன். நான் அதிகமாய் நடந்தேன், குன்றுகளிலும் படிக்கட்டுகளிலும் ஏறி இறங்கினேன்; ஆனாலும் வலியை உணரவே இல்லை!

ஆண்டுவிழா நிகழ்ச்சி முடிந்த அடுத்த நாளான அக்டோபர் 10 அன்று, அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் கிணற்றில் சுரந்து கொண்டிருந்த கடலின் உப்புத் தண்ணீர், குடிப்பதற்கு ஏற்ற மதுரமான தண்ணீராக மாறின ஜியோன்னம் மாகாணத்தில் உள்ள மூவான் மதுர தண்ணீர் இடத்திற்குச் சென்றோம் (யாத்திராகமம் 15:25). என் இருதய விருப்பங்களை நினைத்துக் கொண்டு மூவான் மதுர தண்ணீர் குளத்தில் மூழ்குவதற்கு முன்பு ஜெபிக்கலாம் என்று இருந்தபொழுது, திடீரென ஒரு கடுமையான தலைவலி எனக்கு வந்தது. எந்த ஒரு ஜெப விண்ணப்பத்தையும் நினைக்க முடியாத அளவிற்கு அது ஒரு கடுமையான தலைவலியாக இருந்ததால், நான், “கர்த்தாவே! என்னைப் போன்ற பாவியை தயவாய் மன்னியும். என் தலைவலியை சுகமாக்கும்!” என்று நானாகவே மீண்டும் மீண்டும் சொன்னேன்.

அக்டோபர் 11 அன்ற காலை வேளையில், நான் நன்றாய் உணர்ந்தேன், வீடு திரும்பினேன். நான் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் சென்றபிறகு, என் கடுமையான தலைவலி மறைந்துப்போனதை உணர்ந்தேன்! என் சிறுபிராயத்திலிருந்து அது என்னை தொந்தரவு செய்துகொண்டிருந்தது. எனவே, எப்பொழும் நான் தலைவலிக்கான மாத்திரைகளை என்னோடு எடுத்துச்சென்று, தேவைப்படும்பொழுதெல்லாம் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் எனக்கு எவ்வித தலைவலியும் இதுவரை உண்டாகவில்லை. எனக்கு உயரிய இரத்த அழுத்தம் இருந்தது. ஆனால் கொரியாவிற்குச் சென்று வந்ததிலிருந்து, நான் பரிசோதிக்கும் போதெல்லாம் என் இரத்த அழுத்தத்தின் அளவு இயல்பாகவே இருக்கிறது.

நான் தலைவலியினிமித்தம் எவ்வளவாக வேதனையடைந்தேன் என்பது என் மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும். மேலும் அவர்கள் எனக்கு முன்பு ஏற்பட்ட வாதநோயினால்தான் எப்பொழுதும் தலைவலி ஏற்படுகிறது என்பதையும் நினைவுகூர்ந்தனர். எப்படியிருந்தாலும், நான் கொரியாவிற்குச் சென்று வந்த பிறகு, தலை வலியின்றி நான் ஆரோக்கியமாக இருக்கிறேன். என் நன்றியின் உள்ளத்தை வெறும் வார்த்தைகளால் என்னால் விவரித்து சொல்ல முடியாது. அறிவர். லீ அவர்களின் ஒரே ஜெபத்தினால் எனக்கு இவ்வளவு சீக்கிரத்தில் பதில் கிடைத்தது என்னை அதிக ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

நான் இன்னும் ஒரு பிரம்மிப்பூட்டும் நிகழ்வை பற்றியும் சொல்லுகிறேன். நான் சிறுமியாய் இருந்த பொழுது, என்னால் நன்றாக ஓவியம் வரைய முடியாது. எந்த ஒரு சிறு பிள்ளையும் சுலபமாய் வரைந்து விடும் ஒரு முயலைக்கூட எனக்கு வரைய தெரியாது. ஆனால் தற்போதோ நான் ஓவியம் வரைவதில் சிறப்பாக இருக்கிறேன்!

அது எப்படி சாத்தியம் என்பதை சொல்கிறேன். மான்மின் தலைமை சபையிலிருந்து ரஷ்யாவிற்கு நான் திரும்பி வந்த பிறகு, என் பேத்தியின் பள்ளியில் நடந்த ஓவியப் போட்டிக்கு அவளுக்கு துணையாக சென்றிருந்தேன். அவள் ஓவியம் வரைந்து கொண்டிருந்த பொழுது, திடீரென என்னைப் பார்த்து, “பாட்டி, என்னோடு நீங்களும் ஓவியம் வரையலாமே? சும்மா உட்கார்ந்திருப்பதை விட அது நல்லதுதானே” என்றாள். சரி என்று நான் வரைய துவங்கிய உடனே, என் கண்களுக்கு முன்பாகவே ஆச்சரியமான ஒன்று நடந்தது. என் மூளையிலும் இரு–தயத்திலும் நான் ஓவிய திறமையை உணர துவங்கினேன். என் கரங்கள் என் உணர்வை வரைப்படத்தாளில் வெளிப்படுத்த துவங்கியது. என்னைச் சுற்றியிருந்த மக்கள் என் ஓவியத்தைப் பார்த்து, “வாவ்! நீங்கள் உண்மையிலேயே சிறப்பாக வரைந் துள்ளீர்கள். நீங்கள் ஒரு பெரிய ஓவியராக இருக்கவேண்டும். தொடர்ந்து வரையுங்கள்” என்றார்கள். அதை நினைத்தபொழுது எனக்கே ஆச்சரியமாக இருந்தது!

அதுமுதற்கொண்டு, மூன்று மாதங்களில் நான் 16 ஓவியங்களை வரைந்திருக்கிறேன். அவற்றை மருத்துவமனையில் தொங்க விட்டிருக்கிறேன். நோயாளிகளும் அவற்றை ரசிக்கி றார்கள். நான் ஓவியம் வரையும்போதெல்லாம் என் உள்ளத்தில் சந்தோஷமும் களிப்பும் பொங்குகிறது. என் ஓவியங்களை பார்க்கும்போது, “இந்த ஓவியங்களை வரைந்தது நான்தானா?” என்று ஆச்சரியமடைகிறேன்.


இந்த சம்பவத்தை நான் ஆராய்ந்துப் பார்த்தேன். நான் மான்மின் தலைமை சபையின் தலைமை போதகர் அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன்; மூவான் மதுர தண்ணீர் குளத்தில் மூழ்கி எழுந்தேன். பிறகு, என் கடுமையான தலைவலி மறைந்துப்போனது. தலைவலியிலிருந்து சுகத்தைப் பெற்ற பிறகு ஓவியக் கலையின் நுணுக்கங்களையும் படைப்பாற்றலையும் கட்டுப்படுத்துகிற மூளைச் செல்கள் புதிதாய் உருவாக்கப்பட்டு விட்டதோ? இதுபோல யோசிப்பதை தவிர வேறொன்றும் இல்லை, ஏனென்றால் முற்றிலும் வரையவே தெரியாத நான் மிகவும் நன்றாக ஓவியங்களை வரைகிறேன். என் உள்ளங்கனிந்த நன்றிகளை எப்படி வெளிப்படுத்துவது என்று எனக்கு தெரிய வில்லை.

நான் தலைமை போதகரையும், மான்மின் தலைமை சபையையும் இன்னும் அதிகமாய் நேசிக்கிறேன். காரணம், அவர் மூலமாகத்தான் எனக்கு நல்ல ஆரோக்கியம், சந்தோஷம், ஒரு புது வாழ்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. நிஜத்தில், ஒரு சிறந்த ஓவியர் என் ஓவியங்களில் உள்ள குறைகளை கண்டுபிடித்து விடலாம் தான். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், நான் பிறந்ததிலிருந்து ஓவியம் வரைவதை கற்றுக்கொள்ளவில்லை; ஓவியம் ஒழுங்காய் வரையவும் எனக்கு தெரியாது.

ஆகவே, “தேவன் நிச்சயமாகவே ஜீவிக்கிறார். அவரே சுகமளிக்கும் தேவன். அவரை தேடுகிறவர்களுக்கு தமது மகிமையை அவர் வெளிப்படுத்துகிறார்” என்று அநேக மக்களிடம் என் இந்த சம்பவத்தை சாட்சியாகக் கூறுகிறேன்!

நான் தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்–துகிறேன். எனக்காக எப்பொழுதும் ஜெபிக்கிற ஆண்டவருக்கும் என் நன்றிகளை செலுத்துகிறேன். மறுசிருஷ்டிப்பின் வல்லமை யினால் எனக்காக ஜெபித்த தலைமை போதகருக்கும் என் நன்றிகளை தெரிவிக்கிறேன்.





அறிவர். லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்று, மூவான் மதுர தண்ணீர் குளத்தில் மூழ்கி எழுந்த பிறகு, கண்காணியாள் எலினா லிட்வினாவின் தீராத தலைவலி சுகமானது. சிறுவயதில் ஓவியம் வரையாத அவள் ஓவியம் வரையும் திறமையை பெற்றுக்கொண்டாள். அவள் தன் நன்றியின் இதயத்தை வெளிப்படுத்தும்படி ஓவியங்களோடு தன் சாட்சியை சீயோலுக்கு அனுப்பி வைத்தாள்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com